முதல்வர் தலைமையிலான ஒப்பற்ற திராவிட மாடல்

அரசிற்கு மிகச்சிறப்பான சான்று இந்த நிதிநிலை அறிக்கை!

சட்டப்பேரவையில் தாம்பரம் எஸ்.ஆர்.ராஜா பேச்சு!

சென்னை, மார்ச் 22- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் ஒப்பற்ற அரசிற்கு மிகச்சிறப்பான சான்று இந்த நிதிநிலை அறிக்கை என்று சட்டப்பேரவையில் தாம்பரம் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா பேசியதாவது:-

2025-2026-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த என்னுடைய அன்புத் தலைவர், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், இந்தச் சட்டமன்றப் பேரவையில் அசைக்க முடியாத பேராதரவைப் பெற்ற பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வறிக்கை என்பது எவ்வளவு முக்கியம் என்பது தெரியும். அந்த வகையிலே யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பது போல, பார்போற்றும் நிதிநிலை அறிக்கைகள், தாங்கள் செய்யப்படுவதற்கு முன்பாக தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இத்தகைய ஆய்வறிக்கை வெளியிடப்படுவது இதுவே முதல்முறை. விரிவான இந்த அறிக்கை, தற்போதைய தமிழ்நாட்டின் பொருளாதார நிலை, அதன் வளம், நலம், சாதனைகள், வளர்ச்சி வாய்ப்புகள், ஒரு டிரில்லியன் டாலர் என்ற இலக்கை நோக்கி பயணிக்கும் நமது பாதை என அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய அருமையான ஒரு ஆய்வறிக்கை. (மேசையைத் தட்டும ஒலி)

பொருளாதாரம் வேகமான வளர்ச்சி

இந்திய நிலப்பரப்பில் வெறும் 4 சதவிகிதம், மக்கள்தொகையில் 6 சதவிகிதம், ஆனால், இந்திய பொருளாதாரத்தில் நம்முடைய பங்கு 9.21 சதவிகிதமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2024 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டினுடைய மொத்த GSDP பொருளாதாரத்தின் மொத்த மதிப்பு 27.22 இலட்சம் கோடி ரூபாய். ஆனால் அதாவது முதல்வரின் இணையற்ற ஆளுமை திறன் காரணமாக நமது பொருளாதாரம் 13.71 விழுக்காடு வேகத்தில் வளர்ந்து வருகிறது. தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் 2 இலட்சத்து 78 ஆயிரம். ஆனால், இந்திய அளவில் சராசரி தனிநபர் வருமானம் 1 இலட்சத்து 69 ஆயிரம். இந்திய அளவில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 1.6 மடங்கு நமக்கு அதிகமாக இருக்கிறது என்பதை இந்த ஆய்வறிக்கை நமக்கு சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டின் பொருளாதாரம் இன்றைக்கு இந்திய அளவில் மிகப்பெரிய இரண்டாவது பொருளாதாரமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஆய்வறிக்கையின் விவரங்களைப் பார்த்து, தமிழ்நாட்டின் நிதி மேலாண்மையையும், பொருளாதார வளர்ச்சியையும் பாராட்டாதவர்களே இல்லை. ஆனால், இந்த வளர்ச்சியையும், திறமையையும், ஆற்றலையும் பார்த்து பொறாமைப்படும் சிலர் மட்டும் கண்மூடித்தனமாக விமர்சிக்கிறார்கள். தமிழ்நாடு அரசு கடனில் தத்தளிக்கும்போது, 1 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு எப்படி சாத்தியமாகும் என பேசுகிறார்கள்.

அவர்களுக்காக இந்த செய்தியைச் சொல்ல வேண்டுமென்றால், 2021 பிப்ரவரி மார்ச் மாதத்தில் தி.மு.க. தேர்தல் அறிக்கையை தளபதி அவர்கள் வெளியிட்டபோது, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று நாம் சூளுரைத்தோம். அதன்படி தி.மு.க. அரசு உரிய உத்திகளையும், திட்டங்களையும் அனைத்து துறைகளிலும் தீவிரப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

2021 பிப்ரவரியில் டாலர் மதிப்பு 73 ரூபாய். அதன்படி பார்த்தால் 73 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர வேண்டும். ஆனால் இன்றைக்கு 2023-ஆக இருந்த 13.71 விழுக்காடாக வளர்ந்து வரும் நமது மாநிலத்தின் பொருளாதாரம் இன்னும் ஐந்தாண்டுகளில் ஒரு டிரில்லியன் டாலர் இலக்கை எட்டிப் பிடிப்பது கண்டிப்பாக முடியும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களால் 2025-26-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை இன்றைக்கு நாட்டையே அதிர வைத்திருக்கின்றது. என்ன நாடு அதிர்ந்திருக்கிறது. அத்தனை பத்திரிகைகளும் 'ரூ' என்ற ஒரே ஒரு வார்த்தைதான். (மேசையைத் தட்டும் ஒலி) 'ரூ' என்று சொன்னவுடன் ஒன்றிய அமைச்சர் அலரும் சத்தம் கேட்டு டெல்லி அதிகாரத்தையே கிடுகிடுக்க வைத்து விட்டது. இதை நாம் கண்கூடாக பார்த்தோம். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல ஆடிப்போனார்கள்.

முதலமைச்சர் அவர்கள் "அதெல்லாம் ஒன்றும் இல்லை. அநாவசியமாக பயப்படாதீர்கள். 'ரூ' என்பது ரூபாயைக் குறிக்கின்ற ஒரே ஒரு சொல்தான்" என்று சொன்னபிறகுதான் டெல்லி இன்றைக்கு மூச்சு வாங்கி அமர்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், நம்முடைய நிதிநிலை அறிக்கையை எப்படி கூர்ந்து கவனிக்கிறார்கள் என்று நாம் பார்க்க வேண்டும். ஒரு நிதிநிலை அறிக்கை அதுவும் குறிப்பாக தமிழ் நாட்டு நிதிநிலை அறிக்கை இந்தியாவிலே இரண்டாவது பெரிய பொருளாதார நாடு என்று ஒரு பக்கம் நாம் சொல்கிறோம். உலகத்திலே மூன்றாவது பெரிய பொருளாதார நாடு என்று இந்தியா சொல்லிக்கொண்டிருக்கிறது.

ஆக நாம் எந்தளவுக்கு இன்றைக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிதிநிலை அறிக்கையில் மக்கள் நல திட்டங்கள் குறித்த பட்டியல்கள் மணிக்கணக்கில் பேசலாம். இன்றைக்கு ஆங்கிலப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, தமிழ்ப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, அன்றாடம் தொலைக்காட்சிகளில் வருகிற செய்திகளாக இருந்தாலும் சரி, எவ்வளவு செய்திகள் ஒரு விமர்சனம் இல்லாமல் ஒரு அரசு இருக்கிறது என்று சொன்னால், ஒரு நிதிநிலை அறிக்கை அளிக்கிறது என்று சொன்னால், நம்முடைய நிதிநிலை அறிக்கை தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. அதிலே பல திட்டங்கள் 2 மணிநேரம் 40 நிமிடங்கள் நமது நிதியமைச்சர் பேசினார்.

ஆனால், ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு செய்தி வெளியிட்டார்கள். ஆனால், மத்திய பட்ஜெட்டுக்கு எவ்வளவு விளம்பரம் வருமோ அதுபோல் ஒரு மாநில பட்ஜெட்டுக்கு வந்தது என்றுசொன்னால், நம்முடைய முதலமைச்சர் போட்ட இந்த பட்ஜெட்டை தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு, எதிர்கட்சியிலே பேசியவர்கள்கூட சொன்னார்கள். என்ன சொன்னார்களென்றால், ஏன் போன வருடம் கொடுக்கவில்லை, ஏன் அதற்கு முந்தைய வருடம் கொடுக்கவில்லை என்று சொன்னார்களே தவிர இந்த பட்ஜெட்டை தவறு என்ற யாரும் விமர்சனம் கூட செய்யமுடியாத அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது.

அத்தகைய நிதிநிலை அறிக்கையை திராவிட மாடல் அரசைத் தவிர, வேறு எந்த அரசும் தாக்கல் செய்வதற்கு வாய்ப்பில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தாய், தந்தையற்ற ஆதரவற்ற குழந்தைகள் 50,000 குடும்பங்களில் இருக்கிறார்கள். யாராவது நினைத்துப் பார்த்திருப்பார்களா? எத்தனை அப்பா வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், யாரும் கேட்கவில்லை. பெற்றோரை இழந்த ஆதரவற்ற குழந்தைகள் 18 வயது வரை தங்கள் பள்ளிப் படிப்பைத் தொடர மாதம் ரூ.2,000/ வழங்குகிற நிதிநிலை அறிக்கையை அளித்துள்ள ஒரே அரசு நம்முடைய அரசைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. குழந்தைகள் அப்பா என்று இன்றைக்குச்

சொல்கிறார்கள் என்றால் சரிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்களுக்கு மடிக்கணினி

20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு கைக்கணினி அல்லது மடிக்கணினி, சொத்துகளை பெண்கள் பெயரில் பதிவு செய்தால் 1 சதவிகித பதிவுக் கட்டணம் குறைப்பு, ஒரு இலட்சம் மகளிர் தொழில் முனைவோருக்கான மானிய நிதியுதவிக்கென 225 கோடி ரூபாய், கலைஞர் கனவு இல்லம் திட்டத்திற்கு 3,500 கோடி ரூபாய் என இந்த பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புகளைச் சொல்கிறேன்.

தாம்பரம் தொகுதியைப் பொறுத்தவரை, தாம்பரம் மாநகராட்சியை உள்ளடக்கிய தாம்பரம் பகுதிக்கு மட்டும் திடக்கழிவு 1,500 டன் மறுசுழற்சி செய்ய இயலாத திடக்கழிவின் செயலாக்கம் மூலம் தினந்தோறும் 15 முதல் 18 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பது குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, போட்டித் தேர்வுகளுக்குப் படிக்கும் மாணாக்கர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் இலவச wifi வசதியுடன் கூடிய கணினி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன்கூடிய முதல்வர் படைப்பகம் தாம்பரம் நகரில் 5 கோடி ரூபாயில் அமைக்கப்படும் என்று தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிளாம்பாக்கம் முதல் மீனம்பாக்கம் வரை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு 9,335 கோடி ரூபாயில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அது மத்திய அரசு ஒப்புதலுக்காக அனுப்பப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட வேறு என்ன சான்று இருக்க முடியும்? சென்னையில் தற்போது மெட்ரோ இரயில் பணிகள் நடைபெறாத இடமே இல்லை, எங்கு பார்த்தாலும் மெட்ரோ இரயில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒன்றிய அரசு நிதி தரவில்லை. இருந்தாலும் இவ்வளவு நிதி நெருக்கடியிலும், நமது அரசால் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைவிட முக்கியமான அறிவிப்பு ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. தாம்பரம் வேளச்சேரி சாலையிலிருந்து கிண்டி வரை, அதாவது, சைதாப்பேட்டை எல்லை வரை 21 கி.மீ. தூரத்திற்கு மெட்ரோ இரயில் வழித்தட நீட்டிப்பு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு கண்டிப்பாக நிதி ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமது பட்ஜெட்டைப் பற்றி பல்வேறுபட்ட கருத்துகள் பல நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நாங்கள் பெரிய பெருமையாகக் கருதுகிறோம். ஓர் ஒன்றிய அரசு நிதி வழங்காத நிலையிலும், தற்போது இவ்வளவு நிதியை எவ்வாறு இந்த அரசு சமாளிக்கிறது என்பதையும் நாம் முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்யும்போது, 8 கோடி மக்கள், 3 கோடி குடும்பங்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், தொழில்முனைவோர், வியாபாரப் பெருங்குடி மக்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்து, கடும் சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் சாதனை நிதிநிலை அறிக்கையை இந்த அரசு தவிர, வேறு எந்த அரசும் தருவதற்கு வாய்ப்பில்லை. சற்றேறக்குறைய கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 3,73,204 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் வருவாய் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் கடந்த ஆண்டைவிட 9.65 சதவிகிதம் வளர்ச்சி கொண்டதாகும். மூலதனப் பணிகளுக்கான செலவினங்கள் 57,231 கோடி ரூபாய் என்பதும் தனிச் சிறப்பு.

இது கடந்த ஆண்டைவிட 22.38 சதவிகிதம் கூடுதல் என்பது மிகப் பெரிய பேராக நாம் கருதுகிறோம். 2020-2021ல் வரம்பு மீறி, தாறுமாறாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறை, நிதிநிலைப் பற்றாக்குறை போன்ற சீர்கேடுகள் முற்றிலும் களையப்பட்டு, தற்போது இந்த நிதிநிலை அறிக்கை 2025-2026 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், நமது தளபதி அவர்களின் ஒப்பற்ற அரசிற்கு மிகச்சிறப்பானதொரு சான்றாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளதாக மக்கள் இன்றைக்கு போற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடி, கல்விக்கு ஒன்றிய அரசு நிதி வழங்கவில்லை, மெட்ரோ இரயில் திட்டத்திற்கும் நிதி தரவில்லை, மழை, வெள்ள பாதிப்பிற்கும் நிதி தரவில்லை, 100 நாள் வேலைத் திட்டத்திற்கும் நிதி தரவில்லை, நமக்கு வர வேண்டிய GST பகிர்வும் வரவில்லை, நமக்குத் தர வேண்டிய 50 சதவிகித நிதியை 16 ஆவது நிதிக் குழு தருமா என்பதும் சந்தேகம். இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும், நம்முடைய அரசு தற்போது சிறப்பாக செயல்படுகிறது என்றால், அதுதான் நமது திராவிட மாடல் முதல்வர் அவர்களின் சாதனை என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கு பேசிய பலபேர் தங்கள் கருத்துகளைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கெல்லாம் ஒன்றே ஒன்றைத்தான் சொல்ல வேண்டும். யாராவது 1990க்கு முன்பாக நினைத்துப் பாருங்கள். கடன் கொடுப்பதற்கும், கடன் வாங்குவதற்கும் சில முறைகள் இருந்தன. சந்திரசேகர் அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்தபோது 20 டன் தங்கத்தை கடன் வைத்துத்தான் ஒன்றிய அரசு நிதி பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது.

அன்றைக்கு எனக்குத் தெரிந்து அருண் ஷோரி என்ற நிதியமைச்சர் இருந்தார் என்று நான் கருதுகிறேன். எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை. அப்போது அவர் சொன்னது அரசு பொது நிறுவனங்களுக்கு 10 ஆயிரம் கோடியைவிற்று கடன் அரசுக்கு சேர்ப்பதற்கு முயற்சி செய்தார்கள். அப்போது 10 ஆயிரம் கோடி அரசு தொழிற்சாலை இருப்பதற்குக் கூட பணம் இல்லை. உலக பொருளாதார நெருக்கடி, இந்தியப் பொருளாதார நெருக்கடி—1989 முதல் 1991 வரை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தது.

அப்படி ஆட்சி செய்கின்ற நேரத்தில் 1991 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் 7 ஆயிரம் கோடிதான் பட்ஜெட்டில் கடனாக அ.தி.மு.க.விடம் கொடுத்தது. ஆனால், 1996ல் நீங்கள் எங்களிடம் திருப்பிக் கொடுக்கும்போது 14 ஆயிரம் கோடி கடனாக கொடுத்தீர்கள். தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோது உள்ளாட்சித் தேர்தல் எப்போது நடைபெற்றது என்று சொன்னால் 1996ல்தான் நடைபெற்றது. மனசாட்சி இருப்பவர்கள் நெஞ்சைத் தொட்டு கை வைத்துப் பாருங்கள். அடிப்படை வசதிகளைச் செய்த ஒரே ஆட்சி கலைஞர் அவர்களின் ஆட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) 1996லிருந்துதான். அப்போதுதான் மிகப்பெரிய நெருக்கடி வந்தது. 1991 மற்றும் 1996ல் என்ன நிலைமை தெரியுமா? அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்? எந்தெந்த வழக்கு உங்களுக்கு வந்தது? எத்தனை கோடியில் நீங்கள் கல்யாணம் செய்தீர்கள்? எத்தனை carல் நீங்கள் பவனி வந்தீர்கள்? யாருக்காவது தெரியுமா என்றால் அது கேள்விக்குறிதான். ஏனென்றால் நீங்கள் அதை மறந்திருப்பீர்கள். (குறுக்கீடு).

ஆனால், 2006-1996ல் வந்தவுடனே நீங்கள் என்ன சொன்னீர்கள். தேர்தல் வாக்குறுதியை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மறந்திருப்பார்கள். தி.மு.க. ஆட்சியில் பணமே இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பணம் இருக்கும். நீங்கள் எப்படி பணம் வைத்திருந்தீர்கள். நாங்கள் எப்படி வளர்ச்சிப் பாதைக்கு சென்றோம். சென்றது மட்டுமல்ல, 500 ரூபாய் நோட்டு நாங்கள் ஆட்சிக்கு வந்தால்தான் கொடுப்பீர்கள் என்று அத்தனைத் தவறுகளும் எப்படி நடந்தது என்ற விஷயத்திற்குள்ளே செல்ல நான் விரும்பவில்லை. தலைவர் ஆட்சிக்கு வந்தார்.

1996லிருந்து முதல் 2001 வரை நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது என்ன செய்தோம். உங்களிடம் நாங்கள் கொடுக்கும்போது 28 ஆயிரம் கோடி கடன். இதை நீங்கள் புத்தகத்தில் பார்த்துக்கொள்ளலாம். 28 ஆயிரம் கோடி கடன் கொடுத்த நாங்கள் அதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. 2001 முதல் 2006 வரைக்கும் ஆட்சி செய்து விட்டு திருப்பி நீங்கள் எங்களிடம் 56 ஆயிரம் கோடியாகக் கொடுத்தீர்கள்.

அப்போது பொருளாதாரம் குறித்து அத்தனைப் பத்திரிகைகளும் எழுதுகின்றது. அப்போது Globalisation காரணமாக demand இருந்தது. இந்தியாவிற்கு மட்டுமல்ல. உலகம் முழுவதும் demand இருந்தது. 19962001 எங்கள் ஆட்சிக்காத்திலும் அதே போன்றுதான். அப்போது பத்திரிகைகள் எழுதுகிறது 'தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள் கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி, ஆனால், என் மூளை காலியில்லை' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி அன்றைக்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம்.

சத்துணவில் முட்டை வழங்கினோம்!

டி.வி., நாங்கள்தான் கொடுத்தோம். Gas அடுப்பு நாங்கள்தான் கொடுத்தோம். அரிசி இரண்டு ரூபாய் சொன்னோம். 'எப்படிக் கொடுப்பார்கள்' என்று நீங்கள் எங்களைக் கிண்டல் செய்தீர்கள். நீங்கள் எவ்வளவு ரூபாய்க்கு அரிசி கொடுத்தீர்கள் என்று ஞாபகம் இருக்கிறதா? 3.50 ரூபாய்க்குக் கொடுத்தீர்கள். அதையும் முதல் 10 கிலோவிற்கு 3.50 ரூபாய் என்றும் அடுத்த 10 கிலோவிற்கு 6 ரூபாய் என்றும் கொடுத்தீர்கள். ஆனால், 2 ரூபாய்க்குக் கொடுத்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். பிறகு அதையும் குறைத்தோம். அதற்கே 'எப்படிக் கொடுக்க முடியும்' என்று இவர்கள் சண்டைக்கு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நிர்வாகம் செய்ததற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்லவேண்டுமென்றால் அன்றைக்கு பட்ஜெட்டில், ஒரு முட்டை போட்டால் 25 கோடி ரூபாய்தான் செலவு. இரண்டு முட்டை போட்டால் 50 கோடி ரூபாய் செலவு. ஆனால், அந்த 50 கோடி ரூபாய் அளவில் முட்டை போடும் திட்டத்தை நிறுத்திய ஒரு ஆட்சி அ.தி.மு.க. ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் 5 முட்டை போட்டோம். எப்படி போட்டோம் என்று சொல்ல முடியுமா? ஏழைக் குழந்தைகளை அறிந்து.

எஸ்.ஆர்.ராஜா: நாங்கள் 2011ல் திருப்பிக் கொடுக்கும்போது 97 ஆயிரம் கோடிதான் கடனாக அவர்களுக்குக் கொடுத்தோம். 8 இலட்சம் கோடி கடன் கடன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, பழைய கணக்குகளை ஒப்பிடுகையில் இதெல்லாம் ஒன்றுமே இல்லை. ஒன்றே ஒன்று மட்டும் உங்களுக்குச் சொல்ல முடியும். கடந்த நிதியாண்டில் 2014லிலிருந்து நம்முடைய மன்மோகன் சிங் அவர்கள் ஒன்றிய சர்க்காரிடம் கொடுக்கும் போது 55 இலட்சம் கோடி கடனாகக் கொடுத்தார். இப்போது 200 இலட்சம் கோடி கடன் இருக்கிறது. 1956ல் 5 கோடியில் Insurance company ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் பணத்தைத் தான் இன்றைக்கு ஒன்றிய அரசு தொழிலதிபர்களுக்குக் கொடுத்திருக்கிறது. இப்போது நான் சொல்கிறேன். ஒன்றிய அரசு மட்டும் நம் கையில் இருந்தால் அத்தனைக் கடனையும் எங்களுடைய முதல்வர் அவர்கள் அடைக்கக்கூடிய அளவிற்கு எங்களுடைய நிதி மேலாண்மை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குத் திறமையும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மெட்ரோ இரயில் திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, நேரடியாக ஜப்பானுக்குச் சென்று, கடனைப் பெற்று, அதற்கெல்லாம் அவர்கள் விமர்சனம் செய்தார்கள், அ.தி.மு.க. விமர்சனம் செய்தது.

ஆனால், இன்றைக்கு மெட்ரோ இரயில் திட்டம் தமிழ்நாட்டில் எந்தப் பக்கத்தில் நடக்கவில்லை? அண்ணா சாலையில் நடக்கவில்லையா? மயிலாப்பூரில் நடக்கவில்லையா? T. Nagarல் நடக்கவில்லையா? போரூரில் நடக்கவில்லையா? பூந்தமல்லி உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையை விமர்சனம் செய்வதற்கு, தமிழ்நாட்டில் அத்தனை அரசியல் பொருளாதார நிபுணர்களும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறார்கள். இது போன்ற ஒரு நிதிநிலை அறிக்கை இல்லையென்று நாட்டு மக்கள் சொல்கிறார்கள்.

குறிப்பாக தாய்மார்கள், பெண்கள், குழந்தைகள். இன்றைக்கு அப்பா என்று கொண்டாடும் வகையில், 50 ஆயிரம் குழந்தைகளுக்கு மாதம் 2,000 ரூபாய் என்று 18 வயதுவரை கொடுப்பது என்பது இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே எங்குமே இல்லாத, யாரும் நினைக்காத ஒரு சாதனை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மட்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து முடிக்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்

தாம்பரம் மாநகராட்சியில் ஆண்டுக்கு 6 சதவிகித சொத்து வரி உயர்வு என்பது பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்துவதாக உள்ளது. எனவே அதனை நிவர்த்தி செய்து தர வேண்டும்.

தாம்பரம் பெரிய ஏரி, கடப்பேரி ஏரி, எட்டித்தாங்கல் ஏரி ஆகிய ஏரிகளைத் தூர்வாரி கரையினை பலப்படுத்த வேண்டும்.

தாம்பரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட, சிட்லபாக்கம், செம்பாக்கம், மாடம்பாக்கம், பீர்க்கன்காரணை, பெருங்களத்தூர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தை விரிவுப்படுத்தி, பணிகளைத் துவங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

தாம்பரம் தொகுதி, மப்பேடு முதல் வேங்கடமங்கலம் வரை 4 வழிச்சாலையாக அகலப்படுத்த வேண்டும்.

தாம்பரம் தொகுதி, தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையானது நீண்ட நெடிய வரலாற்றுடன், மிகப் பெரும் பரப்பளவில் இயங்கி வரும் நிலையில், அப்பகுதியில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இவ்வாறு எஸ்.ஆர். ராஜா பேசினார்.

டாக்டர் ஜீவகன் அய்யநாதன் தலைமை! ச.பரமசிவம்,ந. ராமலிங்கம் முன்னிலை!

சென்னை மேற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் முதல்வர் பிறந்த நாள்!மாபெரும் மருத்துவ முகாம்!

நே.சிற்றரசு,தயாநிதி மாறன்,டாக்டர் நா. எழிலன்,எம்.கே.மோகன்,கனிமொழி சோமு, திலிப் ராஜ கண்ணப்பன் பங்கேற்பு!

சென்னை மார்ச்:22

சென்னை மேற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில்,மாபெரும் மருத்துவ முகாம் கழகத் தலைவர்,முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (22.3.2025 - சனிக்கிழமை) காலை 8 மணி அளவில் சமுதாய நலக்கூடம் கஜலட்சுமி காலனி செனாய் நகரில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் மருத்துவ முகாமிற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர். ஜீவகன் அய்யநாதன் தலைமை ஏற்கிறார்.

பகுதி கழகச் செயலாளர்கள் ச. பரமசிவம்,ந. ராமலிங்கம் எம்.சி, வட்டச் செயலாளர் சி.பி. திருமலை,மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டாக்டர் ரியாஸ் முகமது, டாக்டர் விக்னேஷ், டாக்டர் க.சீனிவாசன், டாக்டர் இர்ப்பானா, டாக்டர் பரணி பாண்டியன்,டாக்டர் எடிட்டன் ஆறுமுகம், டாக்டர் ஸ்ரீராம், டாக்டர் திருமுருகன்,டாக்டர் ஜான்,செமிமா மெடிக்கல் காசிம்,லேப் பாஷா,டாக்டர்ஸ் சமர், டாக்டர் ரியாஸ் முகமது, எஸ்.ஜே.தணிகைவேல் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இம் மாபெரும் மருத்துவ முகாமை சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்சி,தயாநிதிமாறன் எம்.பி,எம்.கே.மோகன் எம்.எல்.ஏ,கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி,டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக மருத்துவ அணி துணைச் செயலாளர்டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன்,மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் எம். கார்த்திக் மோகன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இதில் மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலை,எ.சங்கீதா, ஜே. எஸ்.அகஸ்டின் பாபு,ஐ. கென்னடி,

பகுதி செயலாளர்கள்: ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மா. பா.அன்புதுரை,எஸ். மதன் மோகன்,வினோத் வேலாயுதம்,

எஸ்.சேரன்,கராத்தே என். ஆனந்தன்,ஏ.டி. முருகன்,கே. ராணி ரவிச்சந்திரன் எம்.சி, நா.சந்திரபாபு,குமரி விஜயகுமாரி,எஸ். ராம்குமார்,எஸ்.எம்.கே. அண்ணாதுரை உள்ளிட்ட மாநில மாவட்ட, பகுதி,வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் அனைத்து நிர்வாகிகளும் மகளிர் அணியினர் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

சென்னை மேற்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் டாக்டர் ந.பகவத்ஜெகன் நன்றியுரை ஆற்றுகிறார்.

புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி தொகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டா